1971 டிசம்பர் 13]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இராணிப்பேட்டையில் ஒரு பேருந்து நிலையம் கட்ட ஒரு லட்சம் ரூபாய் கடனும், கோட்டாசித் தலைவர் அலுவகத்தில் 51 சென்ட் நிலமும் கேட்டார்கள். அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மறுத்து விட்டார்கள். வேறு இடம் பார்த்த பிறகு கடன் கேட்டால் பிறகு யோசிக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : எந்தெந்த முனிசிபாலிட்டிகளில் பஸ் ஸ்டான்ட்கள் கட்டப்பட்டிருக்கின்றன ? எங்கெங்கு கட்டப்படும் ? எவ்வளவு செலவாகும் என்பதற்கு ஏதாவது கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா இந்த அரசாங்கத்தினால் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பொதுவாக நகராட்சிமன்ற பஸ் நிலையங்களில் பப்ளிக் கன்வினியன்ஸ் இல்லை. இருக்கிற இடங்களில் கூட அவை சரிவர பராமரிக்கப்படவில்லை. அதனால் பொது மக்களின் சுகாதாரம் பாதிக்கப்படுகிற நிலை இருக்கிறது. ஆகவே, அதுகுறித்து ஆலோசித்து அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நகராட்சிமன்றங்களிலுள்ள பேருந்து நிலையங்களைக் கண்காணிக்கும் பொறுப்பை அந்தந்த நகராட்சி மன்றங்கள் மேற்கொண்டிருக்கின்றன. ஆகவே, குறைபாடுகள் இருக்குமானால் அதை அந்த அந்த நகராட்சி மன்றங்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். அப்படி அங்கு வசதிகள் ஏற்படுத்தப்படாமல் இருக்குமானால் ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம். நகராட்சி மன்றங்கள் மூலம் அணுகினால் தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும்.

Report of National Labour Commission

" 307 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the report of the National Labour Commission has been received by the Government; and

(*b*) if so, whether the report will be placed on the Table of the House?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) இவ்வறிக்கை ஐந்நூறுக்கும் மேற்கொண்ட பக்கங்களைக் கொண்டதாக இருப்பதால், அவையின் முன் வைக்க இயலவில்லை. உறுப்பினர்களின் பார்வைக்காக சில நகல்கள் சட்டப் பேரவையின் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த அறிக்கையிலுள்ள முக்கியமான அம்சங்களையாவது தொகுத்து இந்தச் சட்ட சபைக்குத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் வழி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்து ஆவன செய்யும்.

ஈ.எஸ்.ஐ. மருந்தகங்கள்

*** 308 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் அரசு E.S.I. மருந்தகங்களை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஒவ்வொரு தொழிற்சாலையிலும் E.S.I. மருந்தகங்களை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் இடையே நீண்ட தூரம் பலவிடங்களில் இருக்கிறது. அந்த வசதிகளை தொழிற்சாலைகளில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் பெறுவதற்கு இயலவில்லை. ஆகவே அந்தக் குறையை நிவர்த்திக்கும் வகையில் அதிக தூரத்திலுள்ள தொழிற்சாலைகளிலாவது, சிறிய அளவில் மருந்தகங்களை அமைப்பதுபற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இப்போதே ஈ.எஸ்.ஐ.-க்கு மத்திய அரசு தரும் உதவியோடு, நமது மாநில அரசு ஒன்றரைக் கோடி ரூபாய் அதிகமாகச் செலவழித்து வருகிறது. ஆகவே இன்னும் அதிகமாகத் தரவேண்டுமென்று மாநில அரசு, மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. நிதி வசதி கிடைத்தவுடன் உறுப்பினர் அவர்களின் யோசனை நடைமுறைக்கு வர பரிசீலனை செய்யப்படும்.

*** 309 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை, சிங்காநல்லூரில் கட்டப்பட்டுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்ட மருத்துவ மனையில், படுக்கை எண்ணிக்கையை தொடக்கத்தில் திட்டமிட்டிருந்தபடி 500 ஆக உயர்த்திட செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தற்போது ஏதுமில்லை.